Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 03 ( 17 - 06 - 1991 ) திங்கட்கிழமை ஓசை: 119

## மாலைநேர வகுப்புக்கள் கட்டாயமாகின்றது

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்படும் மாலை நேர வகுப்புகள் அடுத்த மாதம் முதலாம் திகதிமுதல் கட்டாயமாக்கப்பட வுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நேரங்களில் மட்டும் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப் பட்ட இந்தவகுப்புக்கள் இனிமேல் காலை 7 30 மணியில் இருந்து மாலை 3.00 மணி வரை கட்டாயமாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

# முத்தமிழ்விழா இறுதி நாள்; யாழ். நகரில் மக்கள் வெள்ளம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். முற்றவெளியில் நேற்று நிறைவடைந்த முத்தமிழ் விழாவைக் காண குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து திரண்டு வந்த மக்கள் கூட்டம் முற்றவெளி மைதானத்தை மூடி மனிதக் கம்பளம் விரித்து நின்றது.

நேற்று மாலை 3-30 மணிக்கே குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் மக்கள் வெள்ளம் பிரதான வீதி வழியாக ஆறாகப் பாய்ந்து வந்து முற்றவெளியில் சங்கமித்தது இராணுவத் தாக்குதலுக் குட்பட்டுவரும் தீவகத்தில் இருந்தும் பண்ணைப் பாலம் வழியாக தொடர் தொடராக மக்கள் வந்துகொண்டிருந்தனர். மக்களை ஒழுங்குபடுத்துவதில் தொண்டர்கள் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

நேற்றைய விழாவுக்காக ஒடு மின்குமிழ்கள் மூலம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அகதிகள் விவகாரம்

## மனிதாபிமான நோக்கில் அணுகப்பட வேண்டும்

ப. சிதம்பரம்

(சென்னை)

தமிழகத்தில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்சினை மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் அணுகப் பட வேண்டிய அதே வேளை தீவிரவாதிகள் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும். இவ்வாறு முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் கூறியுள்ளார். சிவகங்கைத் தொகுதியில் முன்னணியில் உள்ள முன்னாள் அமைச்சரான இந்திரா காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திரு. ப சிதம்பரம் சென்னைத் தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியொன்றிலேயே மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

## போலிச் சான்றிதழ் விநியோகத்தர் கைது

(கொழும்பு)

கொழும்பில் போலி பிறப்புச் சான்றிதழ் விற்றவர்களை லஞ்ச ஆணைக் குழுத் திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்

பிறக்காத பிள்ளைகளின் பேரில் விநியோகிக்க தயாரிக்கப்படும் இச்சான்றிதழ்களுக்கென ஆயிரம் ரூபாய் வசூலிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### இழுத்தடிக்கும் போக்கை கடைப்பிடித்தால்

## பிரேமதாஸா, தமிழ் அரசுடன் தான் பேச வேண்டி வரும்

(யாழ்ப்பாணம்)

தமிழருடைய பிரச்சினையில் தொடர்ந்தும் இழுத்தடிக்கும் தன்மையை பிரேமதாஸா அரசு கைக்கொள்ளுமானால் எதிர்காலத்தில் புலிகளுடன் சிறிலங்கா அரசு பேச முடியாது தமிழ் அரசுடன்தான் பேசவேண்டிவருமென இழுத்தடிக்கும் பிரேமதாஸாவின் கொள்கைபற்றி நான் தெரிவித்தபோது குறிப்பிட்டார் தலைவர் பிரபாகரன். இவ்வாறு விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்டார்.

நேற்று முத்தமிழ் விழாவில் திரண்ட மக்கள் சமுத்திரத்தில் அவர் தற்போதைய அரசியல் இராணுவ நிலைமைகுறித்து விளக்கமளித்தார்.

மேலும் அவர் பேசுகையில் இப்பொழுது இராணுவ மேலாதிக்க நிலையில் விடுதலைப்புலிகளே இருந்து வருகின்றனர் ஆகவே இராணுவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி வீழ்ந்து நொருங்கியது; மோதலில் 17 இராணுவம் பலி

செட்டிகுளம் இராணுவ முகாமிலிருந்து வெளியேறிப் பூவரசங்குளம் நோக்கிவந்த சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மூன்றாவது நாளாக நேற்றும் மோதல்கள் இடம்பெற்ற அதேவேளை சிறிலங்கா விமானப்படை விமானங்களும் பலத்த குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மோதல்களின்போது தாக்குதலில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று வீழ்ந்து நொருங்கியதாகவும், அதில் பயணம் செய்த ஆயுதப் படையைச் சேர்ந்தவர் கொல்லப்பட்டதாகவும் சிறிலங்காபாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ்வானொலி அறிவித்தது

மேலும், செட்டிகுளத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மொழியைத் தூய்மைப்படுத்த தமிழியக்கம் கண்டாக வேண்டும்

-- புதுவை இரத்தினதுரை

தமிழ்மொழியைத் தூய்மைப் படுத்த தமிழ்மக்களாகிய நாம் தமிழியக்கம் கண்டாக வேண்டும். இந்தத் தமிழியக்கம் பல்வேறு மட்டங்களிலும் விரைந்து செயற்பட்டாக வேண்டும். இவ்வாறு முத்தமிழ் விழாவின் நிறைவு நாளான பத்தாம்நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை விடுத்த பிரகடனத்தில் குறிப்பிட்டார். அப்பிரகடனததில் தமிழ்மொழியைத் தூய்மைப் படுத்தும் கோட்பாட்டைக் கொண்ட ஒரு தனித்தமிழ் இயக்கத்தை தமிழகத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய லோக்சபாத் தேர்தல் முடிவுகள் 1991

| | |
|---|---|
| வெளிவந்த முடிவுகள் | 134 |
| காங்கிரஸ் (ஐ) | 86 |
| பாரதீய ஜனதா | 34 |
| ஜனதா தளம் | 01 |
| ஜனதா தளம் (எஸ்) | 01 |
| இ. கம்மியூனிஸ்ட் | 01 |
| மாக்சிச கம்மியூனிஸ்ட் | 02 |
| தெலுங்கு தேசம் | 08 |
| சிவசேனை | 01 |
| சுயேச்சை | 00 |

✵ பிந்திக் கிடைத்த செய்தியின் படி

## வவுனியா மோதலில் 8 புலிகள் வீரமரணம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் கடந்த சனி மாலை 5 மணியளவில் செட்டிக்குளம் வீதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் பூவரசங்குளத்தை நோக்கி முன்னேற முயன்ற போது ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஐந்து பெண் போராளிகளுட்பட எட்டுப் போராளிகள் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

வீரமரணமடைந்த வேங்கைகளின் விபரம் பின்வருமாறு:

லெப். ரவி (குமாரசாமி சந்திரகுமார் துன்னாலை வடக்கு, கரவெட்டி), லெப் தவக்குமார் (கிருஸ்ணபிள்ளை சிவபாலசுந்தரம் கொக்குத்தொடுவாய், மணலாறு) கீதன் (சத்தியா பிரபாகரன் பனங்கட்டிக் கொட்டு, மன்னார்) சுஜாத்தா (அனுசியா யோகராசா இக்கம், பருத்தித்துறை) ஜெயசீலி (சுதர்சினி சுந்தரலிங்கம் ராதா விசன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### அ. தி. மு. க. - காங்கிரஸ் கூட்டணி

## தமிழகத்தில் அமோக வெற்றிபெறும் நிலையில்

தமிழக சட்டப் பேரவை நாடாளுமன்றத் தேர்தல்களில் அ. இ. திராவிட முன்னேற்றக் கழகம், இந்திரா காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றிபெறும் நிலையில் உள்ளது 234 சட்டசபைத் தொகுதிகளில் 222 தொகுதிகள் வரை இக் கூட்டணி வெற்றிபெறும் நிலையில் உள்ளது எஞ்சியுள்ள ஒன்பது தொகுதிகளில் 6 தி. மு கவும் இரண்டில் பாட்டாளி மக்கள் கட்சியும் ஒன்றில் ஜனதா தளமும் முன்னணியில் உள்ளன.

தி. மு. க. அமைச்சரவையில் இடம் பெற்ற பெரும்பாலானோர் பின்னடைந்துள்ளனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

முத்தமிழ் விழாவின் போது

# கடமையிலுள்ள போராளிகளையும் ஒரு கணம் சிந்திக்க வேண்டும்

**- காஸ்ரோ**

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ்விழா நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த வேளையில் துப்பாக்கி ஒலியில் விடுதலைக் கீதங்களை இசைத்துக் கொண்டு காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் எமது போராளிகளைப் பற்றி ஒரு கணம் சிந்திக்க வேண்டும். இவர்கள் எதிரியின் காவலரணை உற்று நோக்கி விழி உறங்காது கொண்ட லட்சியம் குன்றிடாது கொள்கை வீரர்களாக மக்களைக் காக்கின்றனர். அவர்களுக்கு செல் அடிகளும் பொம்பர் அடிகளும் ஹெலித் தாக்குதல்களும் துப்பாக்கி வேட்டுகளும் கூட புதிய புதிய இசைகளை எழுப்பியவண்ணம் இருக்கின்றன. எட்டாவது நாள் முத்தமிழ் விழாவில் மக்கள் வெள்ளத்தின் மத்தியில் யாழ். மாவட்ட தலைமைத்தளபதி காஸ்ரோ இவ்வாறு கூறினார்.

மேலும் அவர் அந்தப் பேச்சில் சிலாபத்துறை இராணுவ முகாம் தாக்குதலில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற போராளிகள் இரண்டு முகாம்களை அழிக்க வேண்டியிருந்தது. அதில் ஒன்று சிறியது; மற்றையது பெரியது. சிறியதை தாக்குவதற்காக மேஜர் ரஞ்சன் தலைமையில் ஒரு குழு சென்றது. அத்தாக்குதலை நடாத்தும் போது முகாமை நோக்கி முன்னேறிச் சென்றுகொண்டு ''எதிரிகளின் பாசறையை தேடிப்போகிறோம்'' என்ற புரட்சிப் பாடலை பாடிய வண்ணமே இத்தாக்குதலில் வீரமரணம் அடைந்துள்ளார்கள் என்றார்.

## வயோதிபர் கொலை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணியம் தோட்டப் பகுதியில் 8 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த திரு. எஸ். சேதீஸ்வரம் (56 வயது) வயோதிபர் கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு மணியம் தோட்டம் 3 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள ஒரு வீட்டில் வைத்து இனந்தெரியாத நபர்களால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது சடலம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தகனம் செய்யப்பட்டது.

அரியாலை தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதேச காரியாலயத்தில் இம்மரணம் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

கலைகளைப் பேணுவதை

# உயிர் நாதமாக நாங்கள் கொண்டிருக்க வேண்டும்

**- பாலகுமார்**

(யாழ்ப்பாணம்)

கலைகளை மதித்து பேணிப் பாதுகாப்பதை உயிர்நாதமாக நாங்கள் கொண்டிருக்கவேண்டும் என்ற அடிப்படைக்கருத்தையே இந்த முத்தமிழ்விழா தமிழீழ மக்கள் முன்னால் வைக்கிறது. ஆகவே இந்த முத்தமிழ் விழாக்களின் மூலம் எங்களை நாங்கள் மதித்து எமது கலைகளை நாங்கள் பேணிப்பாதுகாத்துக்கொள்ள வேண்டும் இதன்மூலமாக எமது சொந்தக்காலில் நிற்க முடியும் என்று முற்றவெளியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி முக்கியஸ்தர் வே. பாலகுமாரன் கூறினார்.

அவர் மேலும் தமது பேச்சில் லயங்களே எங்களது ஒரே ஒரு கலைவளர்க்கும் வாய்க்காலாக, வடிகாலாக அமைந்திருந்தன. ஆலயங்களிலே கலாசார நிகழ்வுகள் ஆடம்பர போட்டிகளாகவும் ஆன்மா அற்ற வெறும் டம்பத்திற்காக செய்யும் நிகழ்ச்சியாகவும் காலப்போக்கில் அதுசீரழிந்து மோசமான நிலைக்கு சென்று எமது பாரம்பரிய கலைவடிவங்கள் அழிந்து போய் விட்டது என்றார்.

(லோ)

## பொம்மலாட்ட கருத்தரங்கு

(வேலணை)

தீவகத்தில் உள்ள ஆரம்ப பாடசாலைகளில் கல்வியை போதித்துவரும் ஆசிரியர்களுக்கான பொம்மலாட்ட கருத்தரங்கொன்று 16-ம்திகதி ஞாயிறு தொடங்கி புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறுகின்றது.

இக் கருத்தரங்கில் தீவகத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 40 ஆசிரியர்கள் பங்குபற்றனர்.

மூன்று நாட்களுக்கு நடைபெற விருக்கும் இக் கருத்தரங்கின் இறுதிநாளில் வேலணைக் கல்விக்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. சி. புவேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

(14)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



வீர ஜனனம் 12 - 09 - 1969

வீர மரணம் 18 - 05 - 1991

### வீரவேங்கை சாள்ஸ்

(பொன்னுச்சாமி கருணாகரன்)

தொண்டமானாற்றில் திருவுருவம் கொண்டு
வல்வெட்டித்துறையில் ஷெல்லுக்கு பலியாகி
விட்ட வேங்கை வீரனே சாள்ஸ்ஸே!

பெற்றோர் கதறியழ உற்றார் பரிதவிக்க
நாட்டு மண்ணுக்கு உன்னுயிர் கொடுத்து
சிரித்த முகத்துடன் சென்றாயே சாள்ஸ்ஸே!

இன்பருட்டி
'கமல வாசம்'
பருத்தித்துறை

குடும்பத்தினர்
நண்பர்கள்

(B/2686)

## நினைவு கூருகின்றோம்...

1991 - 06 - 17



**கப்டன் குட்டி**

(இராசலிங்கம் சிவானந்தம் - மேன்காமம்)

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னார் அடம்பனில் சிறிலங்காப் படையினரின் உலங்கு வானூர்தியின் தாக்குதலினால் உயிரிழந்த 3 தமிழ் விவசாயிகள்

1989ஆம் ஆண்டு அச்சுவேலியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**சல்மான்** (காதி அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி தென்னியன்குளம் பகுதியில் இந்தியப் படையினரின் உலங்கு வானூர்திகள் மேற்கொண்ட தாக்குதலினால் உயிரிழந்த தமிழர்கள்

சங்கத்தானையில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட பளை - தம்பகாமத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞன்

புகைவண்டியில் பயணம் செய்கையில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். கந்தர்மடத்தைச் சேர்ந்த பரி. யோவான் கல்லூரி மாணவன்

1990 ஆம் ஆண்டு கப்டைபறிச்சானில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

**கப்டன் குட்டி** (இராசலிங்கம் - சிவானந்தம், மேன்காமம்திருமலை)

மாங்குளம் முகாம் இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**மாக்கிரட்** (கறுப்பையா கிருஷ்ணகுமாரி, முள்ளியவளை)

மல்வத்தையில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சிற்றூரவைத் தலைவர் கனகசுந்தரம்

தாந்தாமலையில் சிறிலங்காப் படையினரின் எறிகணைத் தாக்குதலுக்குப் பலியான ஒரு குழந்தை உட்பட 3 தமிழர்கள்

கிரானில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர்கள்

திருமலை அலஸ்தோட்டம் பகுதியில் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழர்கள்

மூதூரில் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/ 2684)

## 92-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில் 20 - 04 - 1969

தாயக விடிவுக்காக 18 - 03 - 1991

மன்னார் இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த

### வீரவேங்கை மித்திரன்

(கந்தசாமி சிறிக்குமார்)

குடிநலம் காக்கக் குண்டுகள் ஏவினாய்
சிறு பிடியளவேனும் சுயநலம் இல்லா
புலிப்படை வீரனே எம் உயிர்த்தோழனே
உன் பணி தொடர்வோம் ஆயிரமாய்
எழுவோம் எதிரி படையணிசிதற
பண் முகமாய் பாய்வோம்
உன் மானம் தமிழன் தன்மானம்
காக்க உன் செயல் தொடர்வோம்
புலிக்கொடி நாட்டி தனித்தாயகம்
மீட்போம்.

''புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்''

- குடும்பத்தினரும் நண்பர்களும்

(R-1463)

■ சிந்தனைக்கு ■

பிறர் தவறுகளுக்கு நீ சமாதானங்கள் சொல்லலாம்; ஆனால், உன் தவறுக்கு ஒருபோதும் சமாதானம் தேடாதே.

— புப்லிலியஸ் ஸைரஸ்

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 17.06.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 023-2839 நிர்வாகபீடம்: 2209
த.பெ.எண் 15

# முப்படைகளின் தளபதியே படுகொலைக்குப் பொறுப்பு

கொக்கட்டிச் சோலைப் பகுதியில் கடந்த பன்னிரெண்டாம் திகதி இடம் பெற்ற படுகொலைச் சம்பவம் தொடர்பாக மிகவும் கரிசனையாகவும் நீதியாகவும் செயற்படுவதாகவும் இது ஒரு அரசாங்கத்தின் கைமீறிய செயலாக இடம் பெற்றுவிட்டது எனக் காட்டிக் கொள்வதற்கும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவும், அவரது அரசாங்கமும் தீவிர முயற்சியில் இறங்கியுள்ளன.

இதன் பிரகாரம் உடனடியாக முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் உயர்மட்ட விசாரணைக்குழு பூர்வாங்க அறிக்கை தயாரிக்க மட்டக்களப்பிற்குச் சென்றுள்ளது. இக்குழுவின் அறிக்கை உடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும், அதன் அடிப்படையில் முழுமையான பாரபட்சமற்ற விசாரணையை நடத்துவதற்கு விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது;

அதேவேளை நிலைமையை நேரில் அவதானிக்க சிறிலங்கா பிரதமர் டி. பி. விஜயதுங்கா தலைமையிலும் ஓர் குழு மட்டக்களப்பிற்குச் சென்றுள்ளது. அக்குழுவிடம் அறிக்கை சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளது.

அத்தோடு இறந்தவர்களுக்கான இழப்பீடுகள், நிவாரணங்கள் என்பனவும், மருத்துவ வசதியும் உடன் வழங்குமாறு சகல அரச திணைக்களங்களுக்கும் பணிக்கப்பட்டுள்ளது. (இவை எவ்வளவிற்கு நடைமுறைப்படுத்தப்படும் என்பது வேறு விடயம்). அத்தோடு கொக்கட்டிச் சோலைப் படுகொலைச் சம்பவம் இராணுவத்தில் உள்ள ஓர் சிலரின் தனிப்பட்ட செயலாக இருக்கக் கூடும் எனவும் அரசதரப்பில் தெரிவிக்கப்படுகின்றன.

ஆனால், இவ்வாறான நடவடிக்கைகள் எவற்றின் மூலமும் சிறிலங்கா ஜனாதிபதியும், அரசாங்கமும் இந்தப் படுகொலைச் சம்பவத்திற்கான பொறுப்பில் இருந்து தப்பித்துக் கொள்ளவோ, நழுவிவிடவோ முடியாது.

இலங்கையில் சிறிலங்கா இராணுவம் நடத்திய முதலாவது படுகொலைச் சம்பவம் அல்ல இது. 1977ஆம் ஆண்டில் இருந்து பல்வேறு படுகொலைச் சம்பவங்களை தொடர்ச்சியாக சிறிலங்கா இராணுவம் நடத்தி வருகின்றது; அதாவது சிங்களப் பேரினவாத அரசாங்கங்கள் தமது இலக்குகளை அடைவதற்கு இராணுவத்தையே பயன்படுத்தி வந்தன; பிரதானமாக தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களை ஆக்கிரமிப்புச் செய்வதற்கு இராணுவம் பயன்படுத்தப்பட்டது. இந்த ஆக்கிரமிப்பிற்காக அரசாங்கத்தின் ஆசியுடன் தமிழர் படுகொலைகள் இடம்பெற்றன

அதேவேளை கொலைகளுக்கு எதிரான கண்டனங்கள் எழுந்தபோது இராணுவத்தினரின் செயல்களுக்கு அரசாங்கத்தினரால் நியாயம் கற்பிக்கப்பட்டது. பொதுவாக இராணுவ வீரர் ஒருவருக்கு ஏற்படும் சித்தசுவாதீன நடவடிக்கையே படுகொலைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது; பல படுகொலைகளை மறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் காரணமாக படுகொலைகள் இராணுவத்தினருக்கு ஓர் விளையாட்டாகவும் சிறிலங்கா அரசாங்கத்திடம் பாராட்டைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்வாகவும் மாறியது.

அதேவேளை குடிமனைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின் போதும், படுகொலைகளின் போதும் எதிர்பார்த்ததைவிட பலமான கண்டனங்கள், எதிர்ப்புக்கள் எழும்போது அவை இராணுவத்தினரின் தன்னிச்சையான செயல் எனவும், ஆயுதப்படை தமது கட்டுப்பாட்டில் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டு வந்தது. இதன் மூலம் அப்படுகொலைகள் தமது கை மீறி நடந்த காரியங்கள் என காட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது;

இவ்வாறானதொரு நிலையிலேயே கொக்கட்டிச் சோலைப் படுகொலைகள் இடம் பெற்றுள்ளன. அம்பாறை, திருக்கோணமலை மாவட்டங்களில் இருந்து தமிழரை விரட்டியடித்தது போன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தமிழரை விரட்டியடித்தல் அல்லது கொன்றொழித்தல் என்ற சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு பகுதியே இந்தப் படுகொலைகள் ஆகும்; இவை இராணுவத்தினரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பினால் ஏற்பட்ட கொலைகள் அல்ல: கடந்த காலத் திட்டத்தின்படியும், வழிகாட்டலின்படியுமே செய்யப்பட்டதாகும். ஏனெனில் சிறிலங்கா இராணுவம் இதுவரை முக்கிய விவகாரங்களில் தனது விருப்பத்திற்கு ஏற்றவாறு அரசாங்கத்திற்கு மாறாகச் செயற்பட்டதாக தகவல்கள் இல்லை.

ஆனால், சிறிலங்கா அரசின் திட்டம் கொக்கட்டிச் சோலையில் நிறைவேற்றப்பட்டபோது சந்தர்ப்பம், சூழ்நிலை சரியாக இல்லாமையினால் அடையாளம் தெரிய இராணுவத்தினர் மீது பழியைப் போட்டு தப்பிக்கொள்ள சிறிலங்கா ஜனாதிபதியும், அரசாங்கமும் முற்பட்டுள்ளன. இது ஒரு ஏமாற்று நடவடிக்கையாகும். மேலும் இராணுவம் தான் இந்தப் படுகொலைகளைத் தம் இஷ்டத்திற்குச் செய்திருப்பினும் சிறிலங்காவின் முப்படைகளின் தளபதி என்ற ரீதியில் ஜனாதிபதி பிரேமதாசா இக்கொலைகளுக்குப் பதில் கூறியே ஆக வேண்டும்.

# நேருவின் முதல் தவறு

# நேருவுக்குச் சுருக்குக் கயிறு

இந்தியாவில் ஓர் புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான தேர்தல் நிகழ்ந்துகொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் சுதந்திரத்தின் பின் தொடர்ந்து 15 வருடம் இந்தியாவிற்குத் தலைமை தாங்கிய நேருவின் அரசியல் கொள்கையின் வெற்றி தோல்விகளை மதிப்பீடு செய்வது பொருத்தமானதே.

இந்தியாவில் பதவிக்கு வந்த ஆட்சியாளர்களுள் ஓர் அறிவியலாளன் என்ற பெயரைப் பெற்றவர் ஜவஹர்லால் நேரு. இந்தியாவில் - உள்நாட்டு ரீதியாகவும் வெளிநாட்டு ரீதியாகவும் அவர் அவ்வாறு கருதப்பட்டார் என்பது உண்மை. வரலாறு, அரசியல், இந்தியப் பண்பாடு, இந்தியத் தத்துவம் ஆகிய துறைகளில் தேர்ந்த அறிவு இருந்தது என்பதும் உண்மை அரசியல் நிகழ்வுகளை மதிப்பீடு செய்வதில் அவர் கைதேர்ந்தவராக இருந்துள்ளார் என்பதை அவரது எழுத்துக்கள் காட்டுகின்றன. ஆயினும் நவ இந்தியாவைக் கட்டி எழுப்புவதில் இவரது கொள்கை வெற்றியளித்தது என்று சொல்வதற்கில்லை.

இந்தியப் புத்திஜீவிகள் நேருவைப் பலவாறாகப் பாராட்டலாம். 'நவீன இந்தியாவின் சிற்பி' என்று வர்ணிக்கலாம். ஆயினும் இவர் காலத்தில் இந்தியா உளநாட்டு ரீதியாகவோ, அல்லது அண்டை நாட்டுடனான உறவுகளிலோ நல் வளர்ச்சியை எட்டியது என்றில்லை. குறிப்பாக சீன இந்திய யுத்தத்தில் அண்ணளவாக இலங்கையின் நிலப்பரப்பளவு பகுதியைச் சீனா கைப்பற்றியது. மேலும் உள்நாட்டில், இனங்களின் பிரச்சினை தீர்த்து வைக்கப்படாது ஆங்காங்கே தனிநாட்டுக் கோரிக்கைகள் எழுந்தன; அத்துடன் பொருளாதார ரீதியாகவும் இந்தியாவிற்குரிய முதலாளித்துவ வளர்ச்சியை இந்தியா அடைந்திருந்த போதிலும், உலகுடன் ஒப்பிடுகையில் பாரிய நாடான இந்தியா நவீன கைத்தொழில் வளர்ச்சியை எட்டவில்லை என்றே கூறலாம். இந்தியாவின் கைத்தொழில் பண்டங்கள் வளர்ச்சி குன்றிய நாடுகளில்தான் விற்பனை செய்யப்படக்கூடிய தரத்தைக் கொண்டிருந்தன. பெரும் வளமிக்க இந்தியாவால் ஏன் இது முடியவில்லை?

இன்றைய அமெரிக்காவின் பிரதான பலத்தில் ஒன்று அதன் அறிவியல் வளர்ச்சி என்று ஹென்றி கீசிங்கர் கூறுகிறார்; அது உண்மையே. சோவியத் யூனியனையும், சீனாவையும் விட அமெரிக்கா இத்துறையில் ஓங்கி வளர்ந்துள்ளது. இந்தியாவைப் பொறுத்தளவில் சோவியத் யூனியன், சீனா போன்று அல்ல, இங்கு சிந்தனைச் சுதந்திரம் உண்டு என்று, கூறப்படுகிறது. அப்படியிருந்தும் இந்தியாவில் அறிவியல் வளர்ச்சி போதியளவாக வளர்ச்சி பெறவில்லை. நீண்ட பெரும் பாரம்பரியத்தையும் வரலாற்றையும் கொண்ட இந்தியாவில் ஏன் இது நிகழ முடியவில்லை? அறிவியல் என்றால் பிராமணர்கள் என்ற நிலை அங்கு ஏன் இன்னும் மாறமுடியவில்லை? இப்படியான பாரம்பரியத் தன்மைகளில் ஏன் மாற்றமேற்படவில்லை? நேருவின் தலைமையால் இவற்றை எல்லாம் கடந்து நல்வழி காட்ட முடியவில்லை.

இப்படிப்பட்ட சகல தோல்விகளுக்கும் அடிப்படையானது நேருவின் சர்வதேச அரசியல் கண்ணோட்டத்திலுள்ள தவறே இதற்கான அடிப்படை என நான் கருதுகிறேன்: சரியான வெளிநாட்டுக் கண்ணோட்டம் இல்லாமல் நேரு உள்நாட்டுக் கொள்கைகளை வகுத்தார். உள்நாட்டுக் கொள்கைக்கும் வெளிநாட்டுக் கொள்கைக்கும் இடையில் பல கட்டங்களில் ஒருங்கிசைவு ஏற்படவில்லை. இதனால் ஒன்றுடன் ஒன்று முரண்பட்டு பெரும் தளம்பல் நிலையை இந்தியா அடைந்தது.

**சாரணன்**

அணிசேராக் கொள்கையை வகுத்து அதன் மூலம் இந்தியா உலகின் மூன்றாவது சக்தியாகத் திகழ்ந்து அணிகளிடையே பிரச்சினைகள் ஏற்படும்போது அதில் தீர்மானகரமான பாத்திரத்தை இந்தியாவே வகிக்க முடியும் என நேரு கனவு கண்டார் ஆனால் சீன - இந்திய யுத்தத்தின் போது அமெரிக்காவின் கால்களை இறுக அணைத்துக் கொண்டார். (இது 1962 ஆம் ஆண்டு) அமெரிக்க விமானப்படையை இந்தியாவுக்குள் அழைத்தார். இந்தியாவுக்குள் சி.ஐ.ஏயின் இணையினை இயங்கவிட்டார்; பின்பு 1965 ஆம் ஆண்டு இந்திய - பாகிஸ்தானிய யுத்தத்தைத் தொடர்ந்து இந்தியா படிப்படியாக சோவியத் பக்கம் சாயத் தொடங்கியது. இது இந்திரா காந்தியின் காலகட்டம். பின்பு பங்களாதேஷ் பிரச்சினையின் பிரகாரம் இந்தியாவும் ரஷ்யாவும் உத்தியோகபூர்வமாக இல்லாவிட்டாலும் ஓர் அணியென்ற அந்தஸ்திற்கு உரிய ஒப்பந்தத்தை 1971 ஆம் ஆண்டு செய்தன. நேரு வகுத்த பிழையான கொள்கையின் பிரகாரம் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை பெரும் தளம்பல் நிலையை அடைந்திருந்தது.

ஆயினும் சோவியத் கூட்டுக் கூட இந்தியாவிற்கு இராணுவ ரீதியான ஓர் எல்லைப் பாதுகாப்பைச் செய்ய உதவியபோதிலும் உள்நாட்டு வளர்ச்சிக்கோ உள்நாட்டு இனக் கொந்தளிப்புகளுக்கோ தீர்வு காணக் கூடியதாக அமையவில்லை. இராணுவ ரீதியாக அமெரிக்காவின் பகையைச் சம்பாதித்திருந்த போதிலும் பொருளாதார ரீதியாக அமெரிக்காவில் தங்கியிருக்க வேண்டிய நிலை இந்தியாவிற்கிருந்தது. இந்த இத்தகைய சிக்கலை விடுவிக்கக்கூடிய ஓர் கொள்கையை வகுக்க நேருவிற்கும் சரி, நேருவிற்குப் பிந்திய தலைவர்களுக்கும் சரி முடியாது போய்விட்டது.

நேருவின் பின்னரான தலைவர்கள் குறிப்பாக இந்திரா காந்தி நேருவின் சர்வதேசக் கற்பனையிலிருந்து விடுபட்டாலும் நேருவின் பிழையான கொள்கைப் பிடியிலிருந்து விடுபட முடியவில்லை. ஏனெனில் நேருவின் அத்திவாரத்திலிருந்தே ஏனையவற்றைக் கட்டியெழுப்ப வேண்டியநிலை இந்தியாவிற்கிருந்தது.

எனவே இன்றைய காலகட்டத்தின் இந்தியா கருத்திற் கொள்ள வேண்டிய முக்கிய விடயத்தில் ஒன்று நேருவின் வெளியுறவுக் கொள்கையில் உள்ள தவறு என்பது. பாரதீய ஜனதா குறுகிய மனப்பாங்கு கொண்ட ஓர் ஸ்தாபனம் தான். ஆனால் அது நேருவையும் நேருபரம்பரையையும் நிராகரிக்கின்றது. ஏன் பாரதீய ஜனதாக்கட்சியைச் சேர்ந்த சிலர் மகாத்மா காந்தியையே நிராகரிக்கின்றனர். இத்தகைய பாரதீய ஜனதா இன்று ஆதரவைப் பெற்று வருகின்றது என்பதை நாம் கவனிக்க வேண்டும்; எப்படியோ, என்றோ ஓர் நாள் இந்தியாவின் சிற்பி என வர்ணிக்கப்படும் நேருவின் கழுத்தில் வரலாறு சுருக்குக் கயிறிடும் என்பதில் சந்தேகமில்லை. நேரு செய்யத் தவறிய சரிக்காகவும் செய்த பிழைக்காகவும் தூக்குக் கயிற்றில் தொங்குவார் என்பதைச் சந்தேகமின்றிப் பிரகடனப்படுத்தலாம்; இதன் அத்திவாரம் அவர் சர்வதேச நிலைமையைப் புரிந்து கொண்டதில் ஏற்பட்ட தவறு என்பதையும் அடிக் கோடிடலாம்.

> பாரதீய ஜனதா குறுகிய மனப்பாங்கு கொண்ட ஓர் ஸ்தாபனம்தான், ஆனால் அது நேருவையும், நேரு பரம்பரையையும் நிராகரிக்கின்றது. ஏன், பாரதீய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த சிலர் மகாத்மா காந்தியையே நிராகரிக்கின்றனர். இத்தகைய பாரதீய ஜனதா இன்று ஆதரவைப் பெற்று வருகின்றது என்பதை நாம் கவனிக்க வேண்டும்; எப்படியோ, என்றோ ஓர் நாள் இந்தியாவின் சிற்பி என வர்ணிக்கப்படும் நேருவின் கழுத்தில் வரலாறு சுருக்குக் கயிறிடும் என்பதில் சந்தேகமில்லை.

# தேர்தல் வன்முறையில் நான்குபேர் மரணம்

(டில்லி)

இந்தியத் தேர்தலின் இறுதிச் சுற்றுவாக்குப்பதிவு பலத்த பாதுகாப்பிற்கு இடையில் நடைபெற்றது. எதிர்பார்த்த அளவில் பெரும் வன்முறைகள் நிகழாவிடினும் உத்தரப்பிரதேசத்திலும், ஆந்திராவிலும் வன்முறைச்சம்பவங்கள் இடம் பெற்றதாகவும், இதில் நான்கு பேர் கொல்லப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

உத்தரப்பிரதேசத்தில் நடந்த வன்முறையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த வேட்பாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். மேலும் இருவர் வன்முறையில் கொல்லப்பட்டார்கள். ஆந்திர மாநிலத்தில் நக்சலைட்டுக்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு தேர்தல் கடமையில் இருந்த ஒரு பொலிஸார் கொல்லப்பட்டார்.

# வயோதிபர் தற்கொலை

(ஈச்சமோட்டை)

நோயினால் உபாதைதாங்க முடியாமல் வயோதிபர் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார். இச்சம்பவம் கடந்த வெள்ளி புங்கன் குளம்வீதியில் இடம்பெற்றது.

# வாக்குறுதிகளை நிறைவேற்றப் பாடுபடுவோம்

## ஜெயலலிதா

(சென்னை)

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற பாடுபடப் போவதாக சென்னை தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் செல்வி ஜெயலலிதா கூறியுள்ளார். அவர் போட்டியிட்ட காங்கேயம் பர்கூர் ஆகிய இரு தொகுதிகளிலும் முன்னணியில் நிற்கிறார். அவர் பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது. சில நாட்களில் மீண்டும் ராஜீவ் காந்தி பிரதமராகிவிடுவார் என்று நாடே எதிர்பார்த்துக் கொண்டிருந்த சூழ்நிலையில், அவர் கொல்லப்பட்டமையை எண்ணும் போது இதயமே வெடித்து விடும்போலுள்ளது, என்றும் தெரிவித்தார்.

# புதுவையில் அ. தி. மு. க. கூட்டணி முன்னணியில்

(சென்னை)

புதுவை சட்டசபைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் அ.தி.மு.க கூட்டணி வெற்றி பெறும் நிலையில் உள்ளது. பாண்டிச்சேரி நாடாளுமன்ற ஆசனத்தையும் இ. காங்கிரஸ் கைப்பற்றும் நிலையில் உள்ளது.

கலைக்கப்பட்ட சட்டப்பேரவையில் முதல் மந்திரியாக இருந்த தி. மு. க கட்சியைச் சேர்ந்த இராமச்சந்திரன் தமது தொகுதியான மன்னார் பேட்டையில் தோல்வி அடைந்துள்ளார்.

# வடக்கில் காங்கிரஸ் பலவீனமான நிலையில்

(டில்லி)

இந்தியாவின் பத்தாவது மக்களவைக்கும் சட்ட மன்றங்களுக்கும் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் நேற்று வெளியாகத் தொடங்கியுள்ளன அதன்படி கேரளா, தமிழ்நாடு கர்நாடகம், பாண்டிச்சேரி ஆகிய தென் மாநிலங்களில் காங்கிரஸ் கட்சியும், அதன் கூட்டணிக் கட்சிகளும் முன்னணியில் உள்ளன. ராஜஸ்தான், மத்தியபிரதேசம் போன்ற பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சியிலிருக்கும் மாநிலங்களிலும் ஜனதா தள் ஆட்சியில் இருந்த ஹரியானாவில் காங்கிரஸ் கட்சி முன்னணியில் உள்ளது. மேற்கு வங்காளத்தில் கம்யூனிஸ்ட் கட்சியும், உத்திரப்பிரதேச மாநிலத்தில் பாரதிய ஜனதாக் கட்சியும் மகாராஷ்டிரா, மாநிலத்தில் ஜனதாக் கட்சிக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது பீகார் மாநிலத்தில் ஜனதா தள் அமோக வெற்றியீட்டும் நிலையில் உள்ளது. ஆந்திரப் பிரதேசத்தில் தெலுங்கு தேசக் கட்சி முன்னணியில் நிற்கிறது.

## அங்குரார்ப்பணக் கூட்டம்

(பருத்தித்துறை)

புற்றளை மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் மன்ற அங்குரார்ப்பணக் கூட்டம் இம்மாதம் 23 ஆம் திகதி வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு எஸ் யோகுவா தலைமையில் நடைபெறவுள்ளது. வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் அனைவரையும் இக் கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு வித்தியாலய அபிவிருத்திச்சபைச் செயலாளர் திரு. கே வி செல்வராஜன் அறிவித்துள்ளார்.

(25)

## குறை இருந்தால் முறையிடவும்

கோரதீவு சங்குப்பிட்டி இறங்குதுறையூடாகப் பிரயாணம் செய்யும் பொதுமக்கள் அனைவரும் தங்களுக்கு ஏதாவது குறைபாடுகள் அல்லது எம்மால் நிறுத்தப்பட்டிருக்கும் வேலைசெய்யும் ஊழியர்கள், தங்களுடன் முறைப்பட்டால் அவர்களுடன் முரண்படாமல் எங்களுடன் தொடர்பு கொள்ளவும். இவ்வாறு இறங்குதுறைப் பொறுப்பாளர் திரு. சபேசன் அவர்கள் கேட்டுள்ளார்.

(71)

### தமிழ் மொழியைத்

தமிழ்க்கடல் திரு வி. க. மறைமலையடிகள், தேவநேயப் பாவாணர், பாரதிதாசன் போன்றோர்கள் கண்ட தமிழ் இயக்கம் போன்ற தமிழியக்கத்தை அனைத்துத் துறை சார்ந்த அறிஞர்களை உள்ளடக்கியதாக நாம் தோற்றுவிக்க வேண்டும். அந்தத் தமிழியக்கம் தமிழ் மொழியைத் தூய்மைப் படுத்த அனைத்து வழிவகைகளையும் கண்டறிந்து செயற்பட வேண்டும். பல்கலைக்கழக மட்டத்தில் தமிழ்மொழியைத் தூய்மைப்படுத்துவதற்கென ஒரு தனித்துறை தோற்றுவிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும் நாம் பயன்படுத்தும் வேற்றுமொழிச் சொற்களுக்கு எம் மொழியில் சொற்கள் இல்லாதவிடத்து ஏற்ற மாற்றுச் சொற்களைத் தமிழில் தோற்றுவிப்பதற்கென தமிழறிஞர்களையும், மாற்றப்பட வேண்டிய சொற்களை அறிய துறை சார்ந்த வல்லுநர்களைக் கொண்ட குழுக்கள் துறை தோறும் அமைக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### முத்தமிழ் விழா

அர்த்தமுள்ள அலங்கார வேலைகள் தமிழ் மக்களின் மன உணர்வுகளையும் எழுச்சிகளையும் உணர்த்திக்கொண்டிருந்தன,

வன்னிப்பிராந்திய அரசியல் பொறுப்பாளர் திரு. மனோ அவர்கள் மங்கல விளக்கேற்றிவைக்க விழா ஆரம்பிக்கப்பட்டதும் ஆரம்பத்தில் வழமை போல் மங்கள இசை தொடர்ந்தது.

தொடர்ந்து தலைமை உரையை கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை நிகழ்த்தும்போது இவ்வாண்டின் முத்தமிழ் விழா பிரகடனத்தை வெளியிட்டார்

தொடர்ந்து வன்னிப்பிராந்திய அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மனோ, யாழ் மாவட்டத் தளபதி திரு தினேஸ், திருமலை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ரவி, வன்னிப் பிராந்திய கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. ராசன், யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பா திரு. ராஜன், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு. யோகி, அரசியல் ஆலோசகர் திரு அன்ரன்பாலசிங்கம், கப்பன்கழகத்தைச் சேர்ந்த திரு. இ ஜெயராஜ் ஆகியோர் உரைநிகழ்த்தினர் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

## பாம்பு தீண்டி குடும்பஸ்தர் மரணம்

(புங்குடுதீவு)

பாம்பு தீண்டியதனால் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஒன்று புங்குடுதீவுப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

புங்குடுதீவு ஐந்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த சி. தியாகராசா (வயது 43, என்பவரே பாம்பினால் கடியுண்டு பரிதாபகரமாக உயிரிழந்தவர் ஆவார். அதிகாலை வேளையில் வளவிற்குள் சென்ற இவரை பாம்பு தீண்டியதாகவும் சில மணி நேரத்திற்குள்ளேயே இவர் மரணமடைந்து விட்டதாகவும் கூறப்படுகின்றது நச்சுப் பாம்புகளின் தொல்லை புங்குடுதீவுப் பகுதியில் தற்போது அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது (22)

### வவுனியா

சென்றர், பருத்தித்துறை) அருணா (நவமணி இன்னையா புலோலி தெற்கு, புலோலி) வசுமதி (தவநாயகி இராஜநாயகம் கற்கலைபடு. ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு ஜீவமலர் (துளசி கணேசசுந்தரம் அரசடி வீதி, நல்லூர்)

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### பிரேமதாஸா

சமநிலையை இலங்கை அரசு தமது பக்கத்துக்கே எடுத்துக் கொள்ள முயல்கிறது இதற்கு மேலும்தாக்குதல்களை நடாத்தி எல்லைகளை நீட்டிவிட்டு பேச்சுகளை நடாத்தலாம் என்று எண்ணிக்கொண்டுள்ளது. ஆனால் நாம் ஒரு விடயத்தை சிறீலங்காவுக்கு உணர்த்தியுள்ளோம். அதாவது நிபந்தனை அற்ற முறையில் சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தைகளுக்கு வருமானால் அதற்கு நாம் தயார். ஆனால் இம்முறை நாம் கொழும்பில் பேச தயாரில்லை. ஒன்றில் யாழ்ப்பாணத்தில் அல்லது வெளிநாட்டில் பேச்சுகளை நடாத்த வேண்டும். இதைத் தெளிவாக தெரிவிக்கிறோம்.

மேலும் அப்பாவி மக்களைக் கொன்று எமது பிரதேசங்கள் மீது ஆக்கிரமிப்பு செய்து இராணுவ மேலாதிக்க நிலையில் இருந்து கொண்டு பேச்சுக்களுக்கு வர சிறிலங்கா அரசு எண்ணுமானால் அதற்கு நாம் தயாரில்லை என்றும் வலியுறுத்தி உள்ளோம்.

ஆனால் சிங்கள தேசத்தில் குழப்பநிலை உள்ளது. ஒரு பிரிவினர் தொடர்ந்து யுத்தம் புரிவோம் என்றும் இன்னொரு பிரிவினர் பொறுத்துப்பார்ப்போம் என்றும் இன்னொருபிரிவினர் பேச்சுவார்த்தைக்குப் போவோம் என்றும் குழப்பி நிற்கின்றனர் கொழும்பு குழம்பி நிற்கிறது' ஆனால் எமக்கு இதைப்பற்றி அக்கறை இல்லை நாம் பலமானநிலையில் இருக்கிறோம் மேலும் பலப்படுத்துவோம், நாம் பலமான நிலையில் இருந்து கொண்டுதான் பேசுவோம். சிங்கள அரசு எமது மக்களுக்கு நீதிவழங்கப் போகிறது பேச்சுவார்த்தை மூலம் தீர்வு வழங்கப் போகிறதுஎன்ற நம்பிக்கை எமக்கு இல்லை.

உலக நாடுகளின் சோரிக்கைக்கிணங்க நாம் யுத்தவெறியர்கள் இல்லை பேச்சுகளுக்கும் தயார் எமது மக்களின் தன்னாட்சிஉரிமையை எடுத்து சொல்வதற்கு இந்த பேச்சுவார்த்தை என்ற அரங்கு உதவியாக அமையும் சர்வதேச அரங்கில் எமது போராட்டத்துக்கு நீதியும் அங்கீகாரமும் பெறவும் உதவியாக அமையும் என்ற ஒரே நோக்கத்திற்காக நாம் பேச்சுகளுக்கு எந்த நேரமும் தயாராக உள்ளோம் என்றார் திரு. பாலசிங்கம் அவர்கள். (வோ)

அறிவிக்கப்பட்ட சட்டசபை முடிவுகள்

## தமிழ்நாடு / புதுவை தேர்தல் முடிவுகள் 1991

| | தமிழ்நாடு | புதுவை |
|---|---|---|
| அ. தி. மு க. | 29 | 03 |
| தி. மு. க. | 00 | 02 |
| காங்கிரஸ் (ஐ) | 16 | 11 |
| ஏனையவை | 01 | 01 |

# அத்வானி வெற்றி

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எஸ் கே. அத்வானி குஜராத்திலுள்ள காந்திநகர் தொகுதியில் சினிமா நகர் ராஜேஸ் கன்னாவை 1589 வாக்குகள் வித்திய சத்தில் வெற்றி பெற்றுள்ளார். பாரதீய ஜனதாவின் மற்றமொரு தலைவரான வாஜ்பாய் மத்திய பிரதேசத்தில் வெற்றி பெற்றுள்ளார் இதேவேளை காங்கிரஸ் கட்சியின் முக்கிய பிரமுகர்களான குண்டுராவ், ஜனார்த்தன் பூசாரி, ஜகந்நாத் பசாடியா நட்வட்சிங், சிவராஜ் பட்டீல், வினாக்காட்சில் ஆகியோர் தோல்வி கண்டுள்ளனர்.

# காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் பலர் தேர்தலில் வெற்றி

முன்னாள் மத்தியஅமைச்சர்களான இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சங்கர் ஆனந். ஒஸ்கார் பெர்னான்டோஸ் ஆகியோர் வெற்றியடைந்துள்ளனர் இதே வேளை, ஜெனார்த்தன் ஜெரி, ஜெகநாத தகாரியா ஹெர்மோகன் பவர் ஆகிய முன்னாள் அமைச்சர்கள் தோல்வியடைந்துள்ளார்கள்.

முன்னாள் கர்நாடக முதலமைச்சரும், கர்நாடக மாநில இந்திரா காங்கிரஸ் தலைவருமான ஆர் குர்ஜால் தெற்கு கர்நாடக லோக் சபைத் தொகுதியில் தோல்வியடைந்துள்ளார். இவருடன் போட்டியிட்ட பாரத ஜனதாக் கட்சியைச் சேர்ந்த வெங்கட்ட கிலி 37,000 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார்.

ராஜஸ்தானின் முன்னாள் மத்திய அமைச்சர்களான ராஜேஸ் பாலிஜுக் ஆ ஜெஜ் ஆகியோர் லோக் சபாத் தேர்தலில் வெற்றியீட்டியுள்ளனர்.

இந்திரா காங்கிரஸ் முன்னாள் அமைச்சரான கிருஷ்லால் சர்மா பாரதிய ஜனதாக்கட்சியைச் சேர்ந்த கெதாரிலால் பாரதவால் தோற்கடிக்கப் பட்டுள்ளார்.

பாரத ஜனதாக் கட்சிப் பிரமுகரான யஸ்வன் சின்ஹா சித்தூர் தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார்.

ஜனதாதள் அமைச்சரவையின் முன்னாள் நிதி அமைச்சர் மது தண்டவதே லோக் சபாத்தேர்தலில் தோல்வியடைந்துள்ளார்.

# 80 ரயில் பயணிகள் பஞ்சாப்பில் சுட்டுக் கொலை

(டில்லி)

பஞ்சாப்பில் இடம்பெற்ற இரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் எண்பது மக்கள் உயிர் இழந்தனர் என தெரிவிக்கப்படுகிறது

வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற தப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் ஒரே நேரத்தில் நடைபெற்றதாகவும் இரண்டு சம்பவங்களும் ரயில் நிலையத்தில் நின்ற ரயில் மீது நடத்தப்பட்டது என்றும் ஒன்றில் நாற்பது பேர் உயிர் இழந்து முப்பது பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. மற்றைய சம்பவத்தில் நாற்பது பேர் இறந்ததாகவும் அறுபது பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் 110 பேர்வரை இறந்துள்ளனர் என ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வயோதிபர் மாரடைப்பால் மரணம்

(புங்குடுதீவு)

வீதியால் சென்று கொண்டிருந்த ஒருவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர் அபயக் குரல் எழுப்பியபோதும் வீதி ஓரத்தில் இருந்த வீடுகளில் வசித்த மக்கள் கதவுகளைப் பூட்டி விட்டு வீட்டிற்குள்ளேயே இருந்தனர் இதனால் மாரடைப்பு வேதனையில் அவஸ்தைப்பட்ட நபரே ''தண்ணீர் தண்ணீர்'' என கூக்குரலிட்டுக் கொண்டு உயிரிழந்தார்,

யாழ்ப்பாணத்தில் இருந்து சைக்கிளில் புங்குடுதீவிற்குச் சென்று கொண்டிருந்த சுப்பிரமணியம் என்றவரே மடத்து வெளிப் பகுதியில் மாரடைப்பினால் அவஸ்தைப்பட்டு தண்ணீர் கூட கிடைக்காமல் உயிரிழந்தவர் ஆவார்.

### மாலைநேர

நடாத்தப்படும் இதற்கேற்ப அட்டவணைகளும் மாற்றி அமைக்கப்படவுள்ளன.

மாலைநேர வகுப்புகளை நடாத்தும் ஆசிரியர்களுக்கென வழங்கப்படும் மேலதிக வருமானம் நிறுத்தப்படும் என்றும் இதற்கான சுற்று நிருபம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### தமிழகத்தில்

அமைச்சர் அன்பழகன் தனது தொகுதியில் தோல்வி அடைந்துள்ளார்

அதேவேளை தமிழ்நாட்டில் உள்ள 39 நாடாளுமன்றத் தொகுதியிலும் இதே கூட்டணி முன்னணியில் உள்ளது.

### ஹெலி வீழ்ந்து

இருந்து வந்து பூநகரிசம்குளத்தில் தரித்திருந்த இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் நேற்றிரவு கடும் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். இத்தாக்குதலின்போது பல இராணுவத்தினர் கொலைப்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும் தெரியவருகின்றது. அதேவேளை கடந்த நாற்பத்தெட்டு மணித்தியாலத்தில் இம்மோதலில் 17 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 21 இராணுவத்தினர் படுகாயம் அடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

புலிகள் தரப்பிலும் சில உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கலாமெனத் தெரியவருகின்ற போதிலும் அவை இன்னும் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை;

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 81 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.